Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 296

வெள்ளிக்கிழமை
19 செப்ரெம்பர் 2025

புரட்டாதி 03 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## 240 கிலோ கஞ்சா மீட்பு

கிளிநொச்சி, செப். 19
கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாறுப் பகுதியில் 240 கிலோ கேரளக் கஞ்சா நேற்று மீட்கப்பட் டுள்ளது. 10

## செம்மணிப் புதைகுழியில்

# ஒக்ரோபர் 21ஆம் திகதி மூன்றாம் கட்ட அகழ்வு!

### உத்தேசத் திகதி நீதிமன்றில் தெரிவிப்பு

### விரிவான பட்ஜெட்டும் சமர்ப்பிக்கப்பட்டது

**யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 19**

அரியாலை செம்மணி மனிதப் புதைகுழி மீதான மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளை ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி ஆரம்பிக்க ஏதுவாக இருக்கும் என்று நீதிமன் றத்தில் உத்தேசத் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. 11

## திருகோணமலையில் நேற்று நிலநடுக்கம்!

### சுனாமி எச்சரிக்கையா?

திருகோணமலை, செப். 19
திருகோணமலை கடற்பகுதியில் நேற்று மாலை 4.06 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிக்டர் அளவுகோலில் 3.9 அலகுகளாக இந்த நிலநடுக்கம் பதிவானது. 11

## சங்குப்பிட்டிப் பாலத்தில் கோரம்; டிப்பர் மோதி இளைஞர் பலி!

யாழ்ப்பாணம், செப். 19
யாழ்ப்பாணம் சங்குப்பிட் டிப் பாலத்தில் டிப்பர் மோதி யதில், இளைஞர் ஒருவர் சம்பவ இடத்தில் பரிதாபக ரமாக உயிரிழந்துள்ளார். சாவகச்சேரி - மகிழங் கேணிப் பகுதியைச் சேர்ந்த கமலதாஸ் அஜேந்திரா (வயது-21) என்ற இளை ஞரே உயிரிழந்தவராவார். தூண்டில் மூலம் மீன்பிடி யில் ஈடுபட்டிருந்தவேளை, அந்த இளைஞரை டிப்பர் மோதியுள்ளதாக சாவகச் சேரிப் பொலிஸார் தெரி வித்துள்ள னர். 10

## காற்றாலைக்கு எதிராக இன்று பெரும் போராட்டம்

ஜனாதிபதி செயலகம் முன்பாக இடம்பெறும்

விரிவு பக்:- 11

## தீவக வீதி அபிவிருத்திக்கு ரூ.250 மில்லியன் ஒதுக்கீடு

### அமைச்சர் பிமல் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 19
தீவகப் பகுதியின் வீதி அபி விருத்திப் பணிகளுக்காக 250 மில்லியன் ரூபா நிதி விசேடமாக ஒதுக்கப்பட் டுள்ளது என்று அமைச்சர் பிமல் ரத்நா யக்க தெரிவித் 11

## நல்லூர் மந்திரிமனையை பாதுகாக்க நடவடிக்கை!

### தொல்லியல் திணைக்களம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப். 19
காற்றுடனான கடும் மழை காரணமாக, நல்லூர் மந் திரிமனையின் ஒருபகுதி இடிந்து வீழ்ந்துள்ள நிலை யில், ஏனைய பகுதிகளைப் பாதுகாக்கவும், இடிந்த பகுதி 11



காரைநகர்

## சீநோர் படகுத் தளத்தின் புனரமைப்புப் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 19
காரைநகர் சீநோர் படகுத் தளத்தின் புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்துவைக்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை மாலை 11



### மாவட்டங்கள்தோறும்

## பிரச்சினைகளுக்குரிய விடயங்களுக்கு விசேட ஒருங்கிணைப்புக் குழுக்கள்!

யாழ்ப்பாணம், செப். 19
ஒவ்வொரு மாவட்டங்கள் தோறும் பிரச்சினைகளுக் குரிய விடயங்களுக்கு விசேட ஒருங்கிணைப்புக் குழுக்கள் அமைக்கப்பட் டுள்ளன என்று அமைச்சர் 11

## பாதுகாப்புப் பிரச்சினைகள் மஹிந்தவுக்கு உள்ளதாம்!

கொழும்பு, செப். 19
புலிகள் அமைப்பு ஆயுத ரீதியில் தோற் கடிக்கப்பட்டி 10

## திலீபனின் ஈகத்தின் பெறுமதியை சிறுமைப்படுத்துகின்றது முன்னணி

### முன்னாள் போராளி பஷீர் காக்கா கண்டனம்

யாழ்ப்பாணம், செப். 19
தியாகதீபம் திலீபனின் ஈகத்தின் பெறுமதியையும், தமிழ்த் தேசியத்தையும் விளங்கிக்கொள்ளாமல் அவற்றைச் சிறுமைப்படுத் தும் வகையில் அகில இலங்கைத் தமிழ்க்காங்கி ரஸ் கட்சியினர் கோமாளிக் 11

## திலீபனுக்கு நல்லூரில் நாளை ஆவணக் காட்சியகம் திறப்பு!

யாழ்ப்பாணம், செப். 19
தியாக தீபம் திலீபனின் 38ஆவது ஆண்டு நினை வேந்தலை முன்னிட்டுத் திலீபனின் வரலாற்றை அடுத்த சந்ததிக்குக் கடத்தும் விதமாக நாளை மாலை ஆவணக் காட்சியகம் திறந்து வைக்கப்பட வுள்ளது. 11

### முச்சந்தி முரளி

'வெள்ளம் வந்தபிறகு அணை கட்டிறதுதானே எங்கட பழக்கம் கண்டியளோ'

## புதைகுழிக் கிணறுகள் தொடர்பில் அறிக்கை கோரியது நீதிமன்றம்!

யாழ்ப்பாணம், செப். 19
தீவகப் படுகொலைகளின்போது சடலங்கள் புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் மண்டைதீவுக் கிணறு கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து, அறிக்கை வழங்கு மாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றம் யாழ்ப்பாணம் குற்றத்த டுப்புப் பொலிஸாருக்கு உத்தரவிட் டுள்ளது.
1990ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் பிற்பகுதியில் இடம்பெற்ற இரா ணுவ நடவடிக்கைகளின்போது மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண் கும்பான், காரைநகர் ஆகிய பகுதிகளைச் 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| லொத்தர் | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | மேலதிக விபரம் |
|---|---|---|---|---|---|
| கொவிசெத | 18.09.2025 | 4198 | Y | 02 03 49 79 | விசேட எழுத்து Y |
| ஹந்தஹன ராசி சுப பலன் | 18.09.2025 | 1265 | | 01 36 49 61 | வெற்றி இலக்கினம் விருச்சிகம் |
| NLB ஜய | 18.09.2025 | 0224 | B | 4 5 8 3 | |
| மெகா பவர் | 18.09.2025 | 2304 | P | 09 17 40 74 | சுப்பர் இலக்கம் 24 |
| மஹஜன சம்பத | 18.09.2025 | 5956 | G | 6 0 0 1 5 9 | |
| தன நிதானய | 18.09.2025 | 1986 | H | 09 17 77 82 | விசேட எழுத்து H |
| அத சம்பத | 18.09.2025 | 0531 | G | 0 1 5 9 | |
| சுப தவசக் | 18.09.2025 | 0072 | | 11 33 35 53 | வெற்றி இலக்கினம் விருட்சிகம் |

# மாகாணசபைத் தேர்தலை விரைந்து நடத்துவோம்

## பிரதமர் ஹரிணி உறுதி

**கொழும்பு, செப்.19**
**மாகாணசபைத் தேர்தலை இயலுமானவரை விரைவில் நடத்துவதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கின்றது என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

மாகாணசபைத் தேர்தல் அடுத்த வருடம் நடத்தப்படுமா? என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், மாகாணசபைத் தேர்தல் நிச்சயம் நடத்தப்பட வேண்டும். எல்லை நிர்ணயப் பிரச்சினையால் இந்த விடயத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளது. ஒன்று பழைய முறைமைக்குச் செல்லவேண்டும். இல்லையேல் புதிய முறைமைக்குச் செல்லவேண்டும். இதுதொடர்பில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படும். இயலுமானவரை விரைவில் தேர்தலை நடத்துவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்- என்றார். (ச-44)



# ஹெரோய்னுடன் பிக்கு கைது

கொழும்பு, செப்.19
ஹெரோய்ன் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் பிக்கு ஒருவர் மாத்தளை அளவ்வ பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.
அவருடன் மேலும் இருவர் கைது செய்யப்பட்ட நிலையில் மூவரையும் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தியபோது 7 நாட்கள் தடுப்புக்காவலில் வைக்க உத்தர விடப்பட்டுள்ளது. (ச)

# கட்சி தாவியோருக்கான தடையை நீக்குவதற்கு ஐ.தே.கட்சி தீர்மானம்

கொழும்பு, செப்.19
ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்தமையால் கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த அனைத்துத் தடைகளையும் நீக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
ஐக்கிய மக்கள் சக்தியில் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுக்கு இந்தத் தீர்மானத்தின் ஊடாக மீண்டும் இணைந்து பணியாற்றுவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.
ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில், அதன் தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. ரணில் விக்கிரமசிங்க கைதுசெய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் பங்கேற்ற அனைத்து எதிர்க்கட்சிகளுக்கும் நன்றி தெரிவிக்கும் வகையிலான யோசனை ஒன்றும் அதில் நிறைவேற்றப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 18.09.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0664 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கம் | 2 7 5 6 5 3 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 18.09.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2930 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கம் | 36 46 75 77 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 18.09.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கம் | 21 52 53 65 |
| வெற்றி வாரம் | 5091 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 18.09.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0772 |
| வெற்றி இலக்கம் | 22 25 40 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 18.09.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| மீனம் | |
| வெற்றி இலக்கம் | 01 12 15 47 |
| சீட்டிழுப்பு வாரம் | 4642 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 18.09.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | T |
| சுப்பர் இலக்கம் | 12 |
| வெற்றி இலக்கம் | 08 22 32 34 |
| வெற்றி வாரம் | 2106 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 18.09.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கம் | 16 46 59 76 |
| வெற்றி வாரம் | 2756 |

# யாழ். பண்ணை மீன்சந்தை; மாநகரசபை பாராமுகம்

## இளங்குமரன் எம்.பி. சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், செப்.19
யாழ்ப்பாணம் - பண்ணை மீன் சந்தையில் வளப்பற்றாக்குறை நிலவிவருகின்றது. யாழ். மாநகரசபையினர் நேரில் சென்று பார்வையிட்டு அவற்றைச் சீர்செய்ய வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன் தெரிவித்துள்ளார்.
குறித்த பகுதிக்குக் களவிஜயம் செய்து பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் மாநகரசபையினர் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தாததால் மின்சாரத் துண்டிப்பு இடம்பெற்றுள்ளது. இதனால் வியாபாரிகள் தமது மீன்களை விற்பனை செய்ய முடியாது அவதிக்குள்ளாகினர். மின்சாரம் துண்டித்த நாளின் கட்டணம் மாநகரசபையால் மீன் வியாபாரிகளிடமிருந்து அறவிடப்பட்டுள்ளது. அத்துடன் மீன்சந்தையில் இருக்கின்ற மலசலகூடமும் மிகவும் மோசமாகக் காணப்படுகிறது. எனவே மீனவர்களின் நலன்கருதி இந்த விடயத்தில் யாழ்.மாநகரசபை உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-27)



# இந்தியர் மீது தாக்குதல்; இலங்கை முன்னிலை

கொழும்பு, செப்.19
2022 ஆம் ஆண்டுக்குப் பிறகு வெளிநாடுகளில் இந்தியர்கள் மீதான அதிக எண்ணிக்கையிலான தாக்குதல்கள் இலங்கையில் பதிவாகியுள்ளதாக அந்நாட்டு வெளியுறவு அமைச்சகம் சுட்டிக்காட்டியுள்ளது.
45 நாடுகளில் பதிவான தாக்குதல்கள் மற்றும் சம்பவங்களைக் கண்காணிக்கும் இந்தப் புள்ளிவிவரங்கள், 2022 மற்றும் 2025 க்கு இடையில் இந்தியர்கள் மீதான 66 தாக்குதல்களுடன் இலங்கையை மற்ற நாடுகளைவிட மிகவும் முன்னணியில் உள்ளதாக எடுத்துக்காட்டியுள்ளது. (எ-இ)

# மக்களை ஏமாற்றிய அரசுக்கு மாகாணத் தேர்தலில் பதிலடி

## அழைப்பு விடுக்கிறார் சஜித்

கொழும்பு,செப்.19
தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு, மாகாணசபைத் தேர்தலில் அரசாங்க ஊழியர்களும், மக்களும் தக்கபதிலடி கொடுக்கவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,
அரச ஊழியர்களுக்குப் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி, அவர்களின் ஆசியுடன் தான் இந்த அரசாங்கம் ஆட்சிப் பீடமேறியது. எனினும், நம்பி வாக்களித்த அரச ஊழியர்களை அரசாங்கம் தற்போது கைவிட்டுள்ளது.
23 ஆயிரம் தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு, அவர்களது தொழில் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்ட பின்னரே, மின்சாரத்துறையில் மறுசீரமைப்பு நடவடிக்கை முன்னெடுத்திருக்கப்படவேண்டும். தேர்தல் மேடையில் அரச ஊழியர்களின் உரிமைகள் குறித்து வீராப்புப் பேசிய ஜே.வி.பி.யினருக்கு இன்று அவர்களின் உரிமைகள் குறித்துப் பேச முதுகெலும்பில்லை. மக்களையும், அரச ஊழியர்களையும் ஏமாற்றிய இந்த அரசாங்கத்துக்கு, எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் சரியான பாடம் கற்பிக்குமாறு நான் சகலரையும் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (க-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த ஆண்டு முதல் அனைத்தும் டிஜிற்றல்

*ஜனாதிபதி அநுர தெரிவிப்பு*

**கொழும்பு, செப்.19**

**அரச சேவையை முழுமையாக டிஜிற்றல் மயப்படுத்த அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கப்படும். அடுத்தாண்டு முதல் அனைத்து அரச கொடுக்கல் வாங்கல்களும் டிஜிற்றல் மயப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

கடவத்த -மீரிகம மத்திய அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்திப் பணிகளை நேற்று முன்தினம் ஆரம்பித்த பின்னர் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
நாடாளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டத்தை மலினப்படுத்தும் முன்னாள் ஜனாதிபதிகள் இந்த நாட்டில் உள்ளார்கள். ஊர்வலம் போன்று செல்கிறார்கள், அழுகிறார்கள், பழிவாங்கல் என்று குறிப்பிடுகிறார்கள். சட்டத்தின்முன் அனைவரும் சமமாக மதிக்கப்பட வேண்டும். நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் ஒரு தரப்பினருக்கு மாத்திரம் சிறப்புச் சலுகை வழங்கமுடியாது.
அரசசேவையாளர்கள் இன்று அச்சத்துடன் செயற்படுகின்றனர் என்று ஒரு தரப்பால் கூறப்படுகின்றது.
கடந்த கால ஆட்சியாளர்கள் முன்பாக அரச அதிகாரிகள் வாய்திறப்பதில்லை. ஆட்சியாளர்களின் தீர்மானம் சட்டமாகக் காணப்பட்டது. இன்று அவ்வாறான நிலையா உள்ளது? அரச சேவையாளர்கள் தற்போதுதான் சுயாதீனமாகச் செயற்படுகிறார்கள்.
கிராமப்புறங்களில் அரச சேவையை டிஜிற்றல் மயமாக்க விசேட அவதானம் செலுத்தப்படும் .
ஊழல் மோசடியை இல்லாதொழிக்கவேண்டுமாயின் அரச சேவை டிஜிற்றல் மயப்படுத்தப்படவேண்டும். சிறந்த மாற்றத்தை மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆகவே அரச சேவையாளர்கள் சிறந்த மாற்றத்துக்கு ஒத்துழைக்கவேண்டும் - என்றார். (எ-இ)

## சட்டத்தரணியின் காரில் துப்பாக்கி மீட்பு!


கொழும்பு, செப்.19
வலஸ்முல்ல, நீதிமன்ற வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்த, சட்டத்தரணி ஒருவரின் காரில் இருந்து துப்பாக்கி ஒன்று கண்டெடுக்கப்பட்டதாக வலஸ்முல்ல பொலிஸார் தெரிவித்தனர்.
ஐஸ் போதைப்பொருள் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் இரசாயனப் பொருள்கள் மித்தெனியவில் புதைக்கப்பட்டிருந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணியின் காரில் இருந்து குறித்த துப்பாக்கி கண்டெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



## சிறுமி துஷ்பிரயோகம்; 7 வருட கடூழியச் சிறை

மட்டக்களப்பு, செப்.19
மட்டக்களப்பில் கடந்த 2014ஆம் ஆண்டு 13 வயது சிறுமி ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவருக்கு 20 வருடம் ஒத்திவைக்கப்பட்ட 7வருடக் கடூழியச் சிறைத் தண்டனை நேற்றுமுன்தினம் விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூ. 2 இலட்சம் இழப்பீடு வழங்குமாறு மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்துள்ளார். குறித்த நபர் எதிரான சாட்சிகள், தடையப் பொருள்கள் மற்றும் மருத்துவ அறிக்கைகள் மூலம் குற்றவாளி என இனங்காணப்பட்ட நிலையில் இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## நுளம்புக்குடம்பிகள்; தண்டம் ரூ. 10,000



யாழ்ப்பாணம்,செப்.19
வீட்டுச் சூழலில், நுளம்புக் குடம்பிகள் இனங்காணப்பட்டதையடுத்து உரிமையாளருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் நீதிமன்றால் விதிக்கப்பட்டது.
இணுவில் மற்றும் தாவடிப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட டெங்குக் கட்டுப்பாட்டுக் களத்தரிசிப்பு நடவடிக்கைகளின்போது, குறித்த வீட்டில் டெங்கு நுளம்பு பெருகுவதற்கான சூழல் காணப்பட்டது.
இதனையடுத்து இணுவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால், வீட்டின் உரிமையாளருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று வழக்குத் தொடரப்பட்டது.
வழக்கு விசாரணைகளின்போது, வீட்டின் உரிமையாளர் தன் மீதான குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்டதை அடுத்து, உரிமையாளரை எச்சரித்த மன்று 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது. (க-26)

## கடவுச்சீட்டுப்பட்டியலில் சரிந்தது இலங்கை

கொழும்பு, செப்.19
உலகளாவிய தரவரிசைப்படி 2025ஆம் ஆண்டில் இலங்கையின் கடவுச்சீட்டு ஒரு இடம் சரிந்துள்ளது. கடந்த 11ஆம் திகதி வெளியிடப்பட்ட 2025ஆம் ஆண்டுக்கான ஹென்லி கடவுச்சீட்டுக் குறியீட்டின்படி இலங்கை 97ஆவது இடத்தில் உள்ளது. கடந்த ஆண்டு கடவுச்சீட்டுக் குறியீட்டில் இலங்கை 96ஆவது இடத்தில் இருந்தது.
ஹென்லி கடவுச்சீட்டுக் குறியீடு, முன் விசா இல்லாமல் நுழையக்கூடிய இடங்களின் அடிப்படையில், உலகம் முழுவதும் உள்ள கடவுச்சீட்டுகளை மதிப்பிடுகிறது. அதன்படி சிங்கப்பூர் உலகின் முன்னிலையான கடவுச்சீட்டாக உருவெடுத்துள்ளது. தென்கொரியா மற்றும் ஜப்பான் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களில் உள்ளன. இந்தக் குறியீட்டில் ஆப்கானிஸ்தான் கடைசி இடத்தில் உள்ளது. (எ-இ)




## ஆர் துரோகியள்?

தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரனாம். அதை மாதிரி நினைவேந்தல் செய்யிறவையெல்லாம் சண்டைக்காரரா மாறிட்டினம் போல. எல்லா நினைவேந்தலும் எங்களுக்குத்தான் சொந்தம் எண்டு எடுப்புக்காட்டுற சைக்கிள் கட்சிக்காரர், திலீபனை நினைவேந்த வந்த அமைச்சரை அஞ்சலிக்க விடமாட்டம் எண்டு முந்தநாள் மறிச்சிருக்கினம். "திலீபனுக்கு எப்பிடி இலங்கையின்ர அமைச்சர் அஞ்சலி செலுத்த ஏலும்?" எண்டு அமைச்சருக்குத் துரோகிப்பட்டம் குடுக்க வெளிக்கிட்டு, இப்ப அதுவே அவைக்கு பூமராங் மாதிரி திருப்பி அடிக்கத் தொடங்கிட்டுது. எல்லாப் பக்கமும் இருந்து "இப்பிடிச் செய்தது பிழை" எண்டு குரல்கள் வரத் தொடங்கிட்டுது. அதோட அமைச்சரை அஞ்சலிக்க விட்டிருந்தால் கனக்க அனுகூலங்கள் எங்களுக்குக் கிடைச்சிருக்கும்.

செம்மணியில 'அணையாவிளக்கு' போராட்டத்துக்கு வரேக்க அமைச்சரைக் கலைச்சமாதிரி, திலீபன் நினைவேந்தலுக்கு வரேக்கையும் கலைச்சு "நாங்கள் மட்டும் தான் சுத்தமான தமிழ்த்தேசியக்காரர்கள்" எண்டு காட்ட வெளிக்கிட்டு, இப்ப சந்தி சிரிக்கிற அளவுக்கு சைக்கிளின்ர நிலைமை மாறிட்டுது. உந்த நினைவேந்தல்களைச் செய்ய அரசாங்கம் விடுகுதில்லை, தடைபோடுது எண்டு இவ்வளவு நாளும் பிரச்சினையா இருந்தது. மூண்டு நாலு வருசத்துக்கு முதல், யாழ்ப்பாணம் பொலிஸ் பொறுப்பதிகாரியா இருந்த 'புட்டு' புகழ் பிரசாத் பெர்னாண்டோ திலீபன் நினைவேந்தலுக்கு நீதிமன்றத்தில தடை வாங்கினவர். அதைமீறி அஞ்சலி செய்யப்போன சைக்கிள் கட்சியின்ர கஜேந்திரனை ஜீப்பில வந்து புட்டு பிரசாத் அள்ளிக்கொண்டு போனது எல்லாருக்கும் நினைவிருக்கலாம்.

சரி, பிழைக்கு அப்பால இப்ப திசைகாட்டிக்காரரின்ர ஆட்சியில அப்பிடியான சேட்டையள் ஒண்டுமில்லைத்தானே. அதோட முந்தி நீதிமன்றத்தடை வாங்கின நினைவேந்தலில ஒரு அமைச்சரே கலந்துகொள்ளுறார் எண்டால், அது ஒரு அங்கீகாரம் தானே. இப்பிடி அமைச்சர்மாரும் வந்து அஞ்சலி செய்தால், நினைவேந்தல்களுக்குப் பூசப் படுற பயங்கரவாதச் சாயத்தை இல்லாமலாக்கலாமெல்லோ. அதைவிடத் திலீபனை அஞ்சலிக்க வந்த அமைச்சரிட்ட, அந்த நினைவுத்தூபியை இன்னும் வடிவாக் கட்டுறதுக்கும், அப்பிடியே பக்கத்தில நிரந்தரமா திலீபன் நினைவு அருங்காட்சியகம் கட்டவும் அனுமதிகேட்டு, அவரின்ர வாயாலேயே ஓமெண்டப் பண்ணிக் காரியத்தைச் சாதிக்கிறதுதான் அரசியல். அதைவிட்டிட்டு காணிச்சண்டை மாதிரி, அஞ்சலிக்க வந்த அமைச்சரை வழிமறிச்சு, திருப்பி அனுப்பிறதை திலீபன்கூட மன்னிக்கமாட்டார். இந்தச் சம்பவம் கட்சியின்ர மேல்மட்டத்துக்குத் தெரியாமல் நடந்திட்டு எண்டும் சொல்லுப்படுகுது. ஆனால், மேல்மட்டம் இடங்குடுக்கிறபடியாலதானே அங்க நிக்கிற வாலுகள் இந்த ஆட்டம் ஆடுகினம். இனிமேல், உந்த நினவேந்தல்களை ஒரு கட்சியிட்ட மட்டும் அடகுவைக்காமல், எல்லாரும் சேர்ந்து செய்யிறமாதிரி ஒரு கட்டமைப்பை உருவாக்கவேணும். இல்லாட்டி நினைவேந்தல்களை தங்கட குடும்பச் சொத்துமாதிரி தனியுரிமையாக்கி, உறுதி முடிச்சு மாவீரர்களின்ரையும், மக்களின்ரையும் தியாகத்தை உவையள் கொச்சைப்படுத்துற வேலை தொடரத்தான் போகுது. ஆனால் தங்களைத் தவிர மற்ற எல்லாரும் துரோகி எண்டு முத்திரைகுத்திக் குத்தி கடைசியில இவைக்குச் சனம் துரோகி எண்டு முத்திரை குத்தினாலும் அதிசயமில்லை கண்டியளோ.

padsi@uthayan.com

- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். ஆனால், புதிய முயற்சிகளை மட்டும் தவிர்த்துவிடுவது நல்லது.மாலையில் குடும்பத்துடன் கோயிலுக்குச் செல்லும் வாய்ப்பு அமையும்.

**இடபம்:** இளைய சகோதரர்கள்மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்குத் திடீர்ப்பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது.

**மிதுனம்:** எதிலும் வெற்றியே ஏற்படும் நாள். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது நல்லது. காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தந்தையின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**சிம்மம்:** குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதாக இருந்தால் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த காரியம் தாமதமானாலும் முடிந்துவிடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாயின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வெளியூர்ப் பயணத்தை தவிர்க்கவும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். இளையசகோதரர்கள் உதவிகேட்டு வருவார்கள். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். புதிய முயற்சி சாதகமாகமுடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். உறவினர்கள் வருகையால் அனுகூலம் உண்டாகும்.

**தனுசு:** நல்ல வாய்ப்புகள் எதிர்ப்படும் நாளாக அமையும். கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**மகரம்:** இறைவழிபாட்டுடன் நாளைத் தொடங்குவீர்கள். உங்கள் உற்சாகம் மற்றவர்களையும் தொற்றிக்கொள்ளும். குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி ஏற்படும்.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** அனுகூலமான நாளாக இருக்கும். தந்தையின்மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதரர் உதவிகேட்டு வருவார். அலுவலகத்தில் உங்கள் பணிகளை மற்றவர்களிடம் ஒப்படைக்காமல் நீங்களே செய்வது நல்லது.

# பாடசாலைகளில் நவராத்திரி விழா ஆளுமைகளை வெளிக்கொணரும்

### அகில இலங்கை இந்து மாமன்றம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.19

**அடுத்த வாரம் முதல் தொடங்கவுள்ள நவராத்திரிக் காலத்தில் தமிழ்ப் பாடசாலை மாணவர்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள பாடசாலை அதிபர்கள், கல்வித் திணைக்களப் பணிப்பாளர், கல்வி அமைச்சின் செயலாளர்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்று அகில இலங்கை இந்து மாமன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.**

வருடந்தோறும் நடைபெறும் நவராத்திவிழா கல்விக்குரியது மட்டுமன்றி மாணவர்களின் கலை ஆளுமையை வெளிப்படுத்தும் விழாவாகும். மாணவர்கள் தமது ஆளுமையை வெளிப்படுத்தக் கூடிய சந்தர்ப்பமான காலம் இது வாகும். கடந்த சில ஆண்டுகளாக நவராத்திரிக் காலத்தில் பரீட்சைகளையும், வேறு விளையாட்டுகள் போன்ற நிகழ்வுகளையும் திணைக்களங்கள் நடத்தியமையால் பல பாடசாலைகளில் நவராத்திரி விழாக்கள் வழமைபோன்று சீராக இடம்பெறவில்லை. நவராத்திரிவிழா சைவத்தமிழர்களுக்கு முக்கியமான விழாக்காலமாகும். எனவே நவராத்திரி விழாக்களை பாடசாலைகளில் கொண்டாடுவதற்கு வழிவகை செய்வதுடன் இளைய தலைமுறையினரின் ஆளுமைகளையும் வெளிக்கொண்டுவரவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-20)



## பாரதப்பிரதமர் பிறந்ததினம் கேதீச்சரத்தில் சிறப்புப் பூசை

மன்னார், செப்.19

பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் 75ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு சிறப்புப் பூசை நேற்றுமுன்தினம் புதன்கிழமை மன்னார் பாடல் தலமான மாதோட்டத்து கௌரி உடனமர் திருக்கேதீச்சர ஆலயத்தில் இடம்பெற்றது.

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபைத் தலைவர் எஸ்.எஸ். இராமகிருஷ்ணன் மற்றும் உதவிச் செயலாளர் ம.நடேசானந்தன் ஆகியோரின் ஏற்பாட்டில் சிவசிறீ சசி குருக்களால் இச்சிறப்புப் பூசை இடம்பெற்றது. (ச-60)

## மூளாயில் கண் பரிசோதனையும் மூக்குக்கண்ணாடி வழங்கலும்

யாழ்ப்பாணம், செப்.19

தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் கண் பரிசோதனை செய்யப்பட்டு இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வு மூளாய் வேரம் பகுதியில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து அறநெறிப்பாடசாலை ஆரம்ப நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சட்டத்தரணி சிவபாலசுப்பிரமணியம், விசேட அதிதிகளாக வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் தவிசாளர் எஸ்.ஜெயந்தன், மூளாய் கிராம சேவையாளர் சிவரூபன், வலிகாமம் மேற்கு கலாசார உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)



## தியாகி தீலீபனின் நினைவு வவுனியாவில் அனுஷ்டிப்பு


வவுனியா,செப்.19

தியாகி திலீபனின் 38ஆவது நினைவுதினம் வவுனியா மாநகரசபை வாயிலில் அமைந்துள்ள பொங்குதமிழ் தூபியில் நேற்றுக் காலை கடைப்பிடிக்கப்பட்டது.

இதன்போது திலீபனின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு ஈகைச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரால் ஏற்பாடுசெய்யபட்ட இந்த நிகழ்வில் அதன் முக்கியஸ்தர் எஸ். தவபாலன், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர்,வவுனியா மாநகரசபை முதல்வர் சு.காண்டீபன், உறுப்பினர் தர்மரத்தினம்,பிரதேசசபை உறுப்பினர் சுரேஸ்,பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-110)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் காங்கேசன்துறைப் பொது நூலகத்தால் நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலய மாணவர்களுக்கு நடமாடும் நூலகக் கண்காட்சி மற்றும் வாசிப்புப் போட்டி, வாசிப்புப் பயிற்சி என்பன கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டன. (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




நாளொரு நல்வார்த்தை

ஒருவனிடம் துக்கமும் தூக்கமும் எப்போது குறையுமோ, அப்போதே அவன் மேதையாகிறான்.

– மகாத்மா காந்தி–

## மறையும் மரபுரிமைகள்

யாழ்ப்பாணத்தின் வரலாற்றுப் பெருமையைப் பேணிக்காக்கும் தொல்லியல் சின்னங்களில் முக்கியமான இடத்தைப்பெறும் மந்திரிமனையின் ஒரு பகுதி இடிந்துவீழ்ந்துள்ள செய்தியை ஒரு சாதாரண விடயமாகக் கருதிக் கடந்துவிடமுடியாது. பல நூற்றாண்டுகளாக யாழ்ப்பாணத்தில் அரசியல், சமூக, கலாசாரச் செயற்பாடுகளின் அடையாளமாகத் திகழ்ந்திருந்த இந்த மனை யாழ்ப்பாண இராச்சியத்தின் சாட்சியங்களைச் சுமந்து நிற்கும் சின்னங்களில் ஒன்று. நாமும் நமக்கோர் நலியா அரசுடையோம் என்ற எங்கள் பழம் பெருமையை மார்தட்டிச் சொல்லும் கடைசிக் கட்டட எச்சங்களில் ஒன்றுதான் இந்த மந்திரிமனை. தமிழர் வரலாற்றின் உயிர்ப்புமிக்க தடயங்கள் அழிந்து போவதற்கான தீவிர எச்சரிக்கையாகவே மந்திரிமனையின் அழிவைக் கருதவேண்டும்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பூர்விக நிலங்களே என்பதை நிரூபிப்பதில் தொல்லியல் சின்னங்கள் உறுதியான பங்காற்றுகின்றன. இத்தகைய சின்னங்கள் பாதுகாக்கப்படுவது, வரலாற்றைத் திசைமாற்றும் சதித் திட்டங்களுக்கு எதிரான உறுதியான பதிலாக அமையும். ஓர் இனத்தின் பூர்விக இருப்பைச் சாட்சியமாகக் காட்டும் முதன்மையான ஆதாரங்களில் முக்கியமானவை தொல்லியல் சின்னங்களே என்ற அடிப்படையில் அடக்குமுறைக்கு உள்ளாகி, உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்களுக்கு தொல்லியல் சின்னங்களைப் பாதுகாக்கவேண்டிய மிகப்பெரிய தேவை இருக்கின்றது.

நல்லூரில் உள்ள மந்திரிமனை தொல்பொருள் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளபோதும், அதைப் பாதுகாப்பதற்கான முன்னெடுப்புகள் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை. இலங்கையில் பௌத்த பேரினவாதிகளின் எண்ணவோட்டத்தின் அடிப்படையில் செயற்படும் திணைக்களம் என்று அறியப்பட்டிருக்கும் 'வடக்கு, கிழக்கில் பௌத்தமயமாக்கலை' தமிழ் மக்களின் பூர்விக இடங்களை-புராதனவழிபாட்டிடங்களைக் கையகப்படுத்துவதே தலையாய கடமையாகக் கொண்டிருக்கும் தொல்லியல் திணைக்களம் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் இனம் சார்ந்த தொல்பொருள் சின்னங்களைப் பாதுகாக்க முனைப்பெடுக்கும் என்பதை எப்படி நம்புவது? 'நாம் மந்திரிமனையை புனரமைக்க நடவடிக்கை எடுத்தோம். ஆனால் அந்தக் காணியின் உரிமையாளரின் முட்டுக்கட்டைகளால் அதைச் செய்யமுடியவில்லை' என்று தொல்லியல் திணைக்களம், மந்திரிமனையின் அழிவுக்கு தாம் காரணமில்லை எனத் தப்ப நினைக்கிறது. ஆனால், தொல்லியல் திணைக்களம் உரிய அழுத்தங்களைக் கொடுத்திருந்தால், நிச்சயமாக மந்திரிமனையைப் பாதுகாத்திருக்கமுடியும். ஆனாலும் இந்தமந்திரிமனை அழிவதைத் தொல்லியல் திணைக்களத்தை ஆட்டுவிக்கும் பிக்குகளும், அரசும் விரும்பியிருக்கக் கூடும். ஏனெனில் தமிழ் இனத்தின் பூர்விக இருப்பை சாட்சியமாகக் காட்டும் ஆதாரங்களின் அழிவுகள் அவர்களுக்கு நிச்சயம் கவலையைத் தரபோவதில்லை.

வடக்கு, கிழக்கில் உள்ள தமிழர் வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பதில் அரசு அலட்சியம் காட்டுவதால், தமிழர் தரப்பே முன்னுரிமை காட்ட வேண்டியிருக்கின்றது. மந்திரிமனை போன்ற தொல்லியல் சின்னங்கள் முற்றிலும் அழிந்துபோய்விட்டால், நாளைய தலைமுறைக்கு தமிழர் வரலாற்றை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் மறைந்துவிடும். அதனால் இந்த விடயத்தில் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டி நிற்காமல், தமிழர் அரசியல், சமூக, மத, கல்வி நிறுவனங்களும் இணைந்து இவ்வாறான சின்னங்களைப் பாதுகாக்கும் நடைமுறைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இத்தகைய முயற்சிகளே தமிழர் வரலாற்றை மட்டுமின்றி, வருங்காலத் தலைமுறைகளுக்கான அடையாளத்தையும் பாதுகாக்கும். இவ்வாறான வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்கவேண்டியது தமிழர்கள் முன்னுள்ள மிகப்பெரிய பொறுப்பாகும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




## புற்றுநோய்ச் சிகிச்சை இயந்திர இறக்குமதி தாமதத்தால் சிரமம்

*கதிரியக்கத் தொழில்நுட்பவியலாளர் சங்கம் சுட்டிக்காட்டு*

கொழும்பு, செப்.19

**புற்றுநோய்ச் சிகிச்சைக்காக லீனியர் ஆக்சிலேட்டர் கதிர்வீச்சுச் சிகிச்சை இயந்திரங்களைக் கொள்வனவு செய்யும் திட்டத்தின் இரண்டாம் கட்டம் தாமதிக்கப்படுவதால், நோயாளிகள் பெரும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர் என்று அரச கதிரியக்கத் தொழில் நுட்பவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

புதிய அரசாங்கத்திடம் பொறுப்பேற்ற பின்னர் லீனியர் ஆக்சிலேட்டர் கதிர்வீச்சுச் சிகிச்சை இயந்திரங்களைக் கொள்வனவு செய்ய 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அமைச்சரவை அனுமதி வழங்கியது. அதற்காக அரசாங்கம் சுமார் 10 மில்லியன் அமெரிக்க டொலரை ஒதுக்கியுள்ளது. ஆயினும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் அனுமதி கிடைக்காததால் இதுவரை இந்தத்திட்டம் செயற்படுத்தப்படவில்லை. இதனால் நோயாளர்கள் கடும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதுதொடர்பாக ஜனாதிபதி மற்றும் சுகாதார அமைச்சு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் -என்றார். (எ-இ)



## போலி நாணயத்தாள் நால்வர் கைது

கொழும்பு, செப்.19

அநுராதபுரத்தின் மதவாச்சிப் பகுதியில் நடத்திய சோதனையில் 145 போலி 5 ஆயிரம் ரூபா நாணயத்தாள்களுடன் நான்கு சந்தேக நபர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து போலிநாணயத்தாள்களை அச்சிடப் பயன்படுத்தப்படும் பல மடிக்கணினிகள், கணினிகள் மற்றும் பிற உபகரணங்களுடன் கைப்பற்றப்பட்டுள்ளன. (ச-இ)

## பெக்கோ சமனின் மனைவிக்கு மறியல்

கொழும்பு, செப்.19

பணமோசடித் தடுப்புச் சட்டத்தின்கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பெக்கோ சமனின் மனைவி ஷாதிகா லக்ஷானியை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் சந்தேகநபரின் சட்டத்தரணிகள் முன்வைத்த வாதங்களை பரிசீலித்த பின்னர் கொழும்பு பிரதான நீதவான் அசங்க எஸ்.போதரகம இந்த உத்தரவைப் பிறப்பித்தார். (ச-இ)



## போதை சாரத்தியம் 38 சாரதிகள் கைது

நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 5ஆயிரத்து352 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் மதுபோதையில் வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 38 சாரதிகள் கைதாகினர் என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)




சுற்றுலாத்துறை அபிவிருத்தி

## ஆசிய அபிவிருத்தி வங்கி 100 மில்லியன் டொலர்!

கொழும்பு, செப்.19

இலங்கையில் சுற்றுலாத்துறை அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்ட 'நிலையான சுற்றுலா அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை' நடைமுறைப்படுத்துவதற்காக 100 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவியை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி ஒப்புக்கொண்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் தொடர்புடைய கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்த முதலீட்டின்கீழ், திருகோணமலை மற்றும் தம்புள்ளை (சிகிரியா உட்பட) போன்ற சுற்றுலாத்தலங்களின் வசதிகளை மேம்படுத்துதல், சுற்றுலாப்பயணிகளின் போக்குவரத்து முகாமைத்துவத்தை மேம்படுத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை 20.09.2025

சனிக்கிழமை - புரட்டாதி 4

சுபநேரம் : 03.03 - 04.33

ராகுகாலம் : 09.03 - 10.33


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம்,செப்.19

யாழ்.நகர் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை கூழாவடி வைரவர் கோவிலடியிலும், முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை சிறாம்பியடி சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை பலாலி வீதி 2 ஆம் ஒழுங்கையிலும் தடுப்பூசி ஏற்றப்படும்.

எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை யாழ்.வீதியிலும், முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை பெருமாள் கோவிலடியிலும், பிற்பகல் 2.30 தொடக்கம் மாலை 4 மணி வரை கன்னாதிட்டி காளி கோவிலடியிலும், எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை சிவன் வடக்கு வீதி பாலர் பாடசாலையிலும், முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை கீரிப்பிள்ளையார் கோவிலடியிலும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை மாவடி வீதியிலும், எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் காலை 11 வரை பிரப்பங்குளம் வீதியிலும், காலை 11 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை பி.எ.தம்பி லேனிலும், பிற்பகல் 2.30 தொடக்கம் மாலை 4 மணி வரை கில்லர் வீதியிலும் தடுப்பூசி ஏற்றப்படும் என்று யாழ்.மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார். (க-இ)

# வடக்கிலுள்ள பாடசாலைகளில் ஆளணிச்சீராக்கத்தை சரிசெய்க

## வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு ஆளுநர் பணிப்புரை

யாழ்ப்பாணம்,செப்.19

**வடக்கு மாகாணத்தில் சில பாடங்களுக்கான ஆசிரியர் ஆளணி மேலதிகம் என்று தரவுகள்மூலம் அறியக்கிடைத்துள்ளது.**

அந்தவகையில் வடக்கிலுள்ள எந்தவொரு பாடசாலைகளிலும் வெற்றிடம் நிலவாது ஆளணிச் சீராக்கத்தை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இந்த ஆண்டு நடைமுறைப் படுத்தப்படும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் மாதாந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வலயக்கல்விப் பணிப்பாளர்கள் அடிக்கடி பாடசாலைகளுக்கு களப்பயணம் மேற்கொள்ள வேண்டும். பாடசாலைகளின் தேவைப்பாடுகளை கண்டறிய வேண்டும். எந்தவொரு பாடசாலைகளும் உரிய நிர்வாக நடைமுறைக்கு மாறான கோரிக்கைகளை முன்வைக்கக்கூடாது. அதேநேரம் எந்த நிதியாக இருந்தாலும் அது தொடர்பான வெளிப்படைத்தன்மையும் அவசியம். ஆசிரிய வெற்றிடங்கள் மற்றும் ஆசிரிய ஆளணி தொடர்பான தரவுகளை உள்ளடக்கிய வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இணையத்தளம் புதுப்பிக்கப்பட்ட தரவுத்தளத்துடன் தொடர்ச்சியாக இயங்கவேண்டும் - என்றார். (ச-க-113,66)

# நன்றி வழிபாடு

யாழ்ப்பாணம், செப்.19

கட்டைவேலி தூய திரித்துவ மெதடிஸ்த திருச்சபையின் 204 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நன்றி செலுத்தும் வழிபாடு இணுவில் அருட்தந்தை சோமநாதன் லிங்கேஸ்வரன் தலைமையில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (25)

மானிப்பாய் பிரதேசசபை

# கடந்தகால ஊழலுக்கு நடவடிக்கையில்லை!

## உறுப்பினர்கள் வெளிநடப்பு

யாழ்ப்பாணம், செப்.19

கடந்த காலத்தில் இடம்பெற்ற ஊழல்களை ஆதாரபூர்வமாக நிரூபித்தும் அதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்துத் தெரியப்படுத்தப்படவில்லை என்று தெரிவித்து மானிப்பாய் பிரதேச சபையின் உறுப்பினர்களான அச்சுதபாயன் மற்றும் பகிரதன் ஆகியோர் வெளிநடப்பு செய்துள்ளனர். மானிப்பாய் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு நேற்றுத் தவிசாளர் ஜெசீதன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது வெளிநடப்புச் செய்த உறுப்பினர்கள் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த சபை ஆட்சியில் இலட்சக்கணக்கான பெறுமதியுடைய மின்குமிழ்கள் ஊழல் மோசடிமூலம் காணாமற்போனது. அதனை ஆதாரபூர்வமாக நிரூபித்தோம். கடந்த ஆட்சியில், கமராவை கொள்வனவு செய்வதற்கான கேள்வி விண்ணப்பங்கள் பிரதேசசபையினால் கோரப்பட்டது. இதன்போது விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பப் படிவங்கள், ஏலம் இடம்பெற முன்னரே பிரித்து பார்க்கப்பட்டது. இதனையும் ஆதாரபூர்வமாக நிரூபித்தபோது அதனைக் கடந்த ஆட்சியில் இருந்த தவிசாளரும் ஏற்றுக்கொண்டார். எனினும் இதுதொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என நாங்கள் கேட்டபோதும் எமக்கு அது தெரியப்படுத்தவில்லை-என்றனர். (ச-27)

# ஆசிரியர்களை நியமிக்கக்கோரி பெற்றோர் நேற்று ஆர்ப்பாட்டம்!

வவுனியா,செப்.19

வவுனியா கோயில் புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலயத்தில் தொடர்ச்சியாக நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பக்கோரி, பெற்றோர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுதொடர்பாக பலமுறை வலயக்கல்விப் பணிமனை மற்றும் மாகாணக் கல்வி அமைச்சுக்குத் தெரியப்படுத்தியும், இதுவரை ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை.

இதனால் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே ஆசிரியர் பற்றாக்குறையை உடனடியாக நிவர்த்தி செய்யவேண்டும் என்று பெற்றோர் கோரிக்கை விடுத்தனர். இது தொடர்பாக வவுனியா வடக்கு வலயக் கல்விப்பணிப்பாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, விரைவில் தீர்வு வழங்கப்படும்-என்றார். (க-110)



# அத்துமீறித் திறந்த கடையை மீளப்பூட்டியது மாநகரசபை

யாழ்ப்பாணம், செப்.19

யாழ்ப்பாணம் மாநகரசபையால் யாழ்.நகர் சிற்றங்காடி கடைத்தொகுதியில் சீல்வைக்கப்பட்டிருந்த கடைப்பூட்டு நபரொருவரால் உடைக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டநிலையில், யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் நேரடியாகச் சென்று அந்தக் கடையை சீல்வைத்துப் பூட்டியுள்ளார்.

கடந்த மாதம் சீல்வைத்துப் பூட்டப்பட்ட கடைப்பூட்டை உடைத்து நபர் ஒருவர் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுகின்றார் என்று நேற்றுமுன்தினம் தகவல் கிடைத்தநிலையில், மாநாகரசபையின் துறைசார் அதிகாரிகளை அந்தக் கடையை மீண்டும் சீல்வைத்துப் பூட்டுவதற்கு யாழ்ப்பாணம் மாநகரமுதல்வர் அனுப்பியிருந்தார். ஆயினும் கடையை நடத்திய நபர் அதற்கு அனுமதிக்கவில்லை.

அதையடுத்து மாநகர முதல்வர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம் சென்று பிரதம பொலிஸ் பரிசோதகருடன் கலந்துரையாடி இரு பொலிஸாரை அழைத்துச்சென்று மாநகரசபைக் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக அந்தக் கடையைப் பூட்டிப் பொறுப்பேற்றார். (எ-இ-66)

# சுகாதாரமற்ற உணவகங்கள் முழங்காவிலில் சிக்கின

கிளிநொச்சி முழங்காவிலில் பல உணவகங்களில் மனித பாவனைக்கு உதவாத பெருமளவு பொருள்கள் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் கண்டுபிடித்து அழிக்கப்பட்டதோடு, சட்டத்தைமீறி செயற்பட்டோருக்கு எதிராக வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. பூநகரிப் பிரதேச மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தலைமையில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் முழங்காவிலிலுள்ள கடைத்தொகுதிகள் அண்மையில் திடீர்ப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன.


இதன்போது மூடியற்ற குப்பைக் கூடைகளைப் பேணல், வெப்பமான உணவுகளுடன் பிளாஸ்ரிக் உபகரணப் பாவனை, மருத்துவச்சான்றிதழின்றி உணவைக் கையாண்டமை, தூசு மற்றும் ஈக்களால் உணவுப்பொருள்கள் மாசடையக்கூடியவகையில் காணப்பட்டமை போன்ற சுகாதாரக் குறைபாடுகள் பல உணவகங்களில் கண்டறியப்பட்டநிலையில் அவற்றுக்கு எதிராக கிளிநொச்சி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (ச-25, 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25ம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் அந்தோனிப் பிள்ளை அல்பிரட் யோகராஜா

**(ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)**



அப்பா! 25 ஆண்டுகள் கடந்து போனது
நீங்கள் எங்களை விட்டுப்போய்,
இருக்கும் போது உங்கள் அன்பும், அரவணைப்பும்
எங்கள் மேல் அளவுக்கு அதிகமாகவே இருந்தது
எங்கள் அப்பாவின் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது.
யோகனின் பிள்ளைகள், பொலிசரின் பிள்ளைகள்
என்று மற்றவர்கள் சொல்லும் போது
எமக்கு எவ்வளவு ஆனந்தம்
உலகில் மிகச்சிறந்த தந்தை "எம் அப்பா" என யார்
கூறினாலும், நாங்களும் உரக்கச் சொல்வோம்.
இன்று உங்கள் ஆசீர்வாதத்தால் தான் நாம்
எல்லோரும் இன்று நன்றாக இருக்கின்றோம்
அப்பா! நீங்கள் எங்களின் உயிர் அப்பா...
எம் அப்பாவை போல் யார் இருக்கமுடியும்.

**We miss you Appa.....**


(CS 30274) E

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08.12.1948 | 19.09.2000 |

2, இராசாவின் தோட்ட
ஒழுங்கை,
யாழ்ப்பாணம்

பிரிவால் துயருறும்
அன்பு மனைவி,
அருமைப் பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

# மரண அறிவித்தல்



## இராமநாதன் சிவராமலிங்கம்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18.04.1950 | 18.09.2025 |

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.287/1, உதயநகர் மேற்கு, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் சிவராமலிங்கம் அவர்கள் நேற்று (18.09.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதன் - இலட்சுமிபிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற வேலாயுதம் - பார்வதிபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், நாகராசா (லண்டன்), கனகம்மா (வவுனியா), காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுகந்தினி, குகதாஸ் (குகன்) (அஸ்வின் புகைப்பட கலையகம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானதாசன் ஜெயச்சந்திரிக்கா (தரவு பதிவு இயக்குனர், போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்.) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிநயா, அஸ்வின் (கிளி/கிளிநொச்சி ம.வி. மாணவர்கள்) ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.09.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உதயநகர் மேற்கு,
கிளிநொச்சி.

தகவல் :
குடும்பத்தினர்.

(CS 59428) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# டெங்கு, சிக்கன்குனியா விழிப்புணர்வு ஊர்திபவனி

யாழ்ப்பாணம், செப்.19

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு, வலிகாமம் வடக்குப் பிரதேசசபையால் டெங்கு மற்றும் சிக்கன்குனியா தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்பு ணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஊர்தி நடைபவனி முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஊர்திப் பவனி மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தில் இருந்து ஆரம்பித்து காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரி வரை சென்றடைந்தது. இதில் வலிகாமம் வடக்குப் பிரதேசசபைத் தவிசாளர், உறுப்பினர்கள், செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், பாடசாலை சமூகத்தினர், தெல்லிப் பழைப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் பங்கேற்றனர். (ச)

# உள்ளகப் பொறிமுறை ஊடாக நீதி நிச்சயம் நிலைநாட்டப்படும்

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



கொழும்பு, செப். 19


உள்ளகப் பொறிமுறை ஊடாக நீதியை நிலைநாட்டுவதிலும், அனைத்து இன மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதிலும் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளகப் பொறிமுறை ஊடாக நீதி நிலைநாட்டப்படும் என்பது நாங்கள் வழங்கிய வாக்குறுதிகளில் ஒன்றாகும். எனவே, எமது வாக்குறுதிக்கு ஏற்ப செயற்பட வேண்டிய பெரும் பொறுப்பு எமக்குக் காணப்படுகின்றது. அத்துடன், பொறுப்புக்களை தட்டிக்கழிக்கும் தரப்பும் நாமல்ல.

இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் என்பது மிகவும் அவசியமான ஒன்று. தமது உரிமைகளை அரசாங்கம் பாதுகாக்கின்றது என அனைத்து இன மக்களும் உணரும் நிலை ஏற்பட வேண்டும். அதற்கு நீதித்துறையின் சுயாதீனம் வலுவாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதைநோக்கி எமது அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காணலாம் என்பது தொடர்பில் தற்போது ஆராய்ந்து வருகின்றோம் - என்றார். (அ-ம-44)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
18 . 11 . 1952

மறைவு
22 . 09 . 2022

தெய்வத்திரு
**ஆறுமுகம் கந்தையா விவேகானந்தன்**

(இனுவில் மேற்கு பரமானந்த வல்லி அம்மன்,
லண்டன் வெம்பிளி ஈழபதீஸ்வரர் ஆலய ஸ்தாபகர்
முன்னாள் மஸ்கெலியா எஸ்டேட் அதிகாரி)

அன்பின் அடையாளம்,
வாழ்வின் வழிகாட்டி.
மறைந்தாலும் ஒளியாய்
எங்கள் நெஞ்சில் நிலைத்தவர்.
உமக்கு எம் கண்ணீர் அஞ்சலி!
ஓம் சாந்தி


என்றும் நெஞ்சை விட்டகலா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

"சாந்தினி"
இனுவில் தெற்கு.
174, LittleField Road, Edgware,
London.

பழமுதிர்சோலை,
இனுவில் மேற்கு.

(CS/59435) JK

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் கந்தர் வயித்திலிங்கம் இராசதுரை**

(ஓய்வு நிலை சாலைப் பரிசோதனைக்குழு பொறுப்பதிகாரி
இ.போ.ச.கோண்டாவில் சாலை)

ஆண்டுகள் ஐந்து ஆனது அப்பா
மாநிலத்தில் நீர் பிரிந்து!
ஆண்டுகள் பல ஆனாலும்
என்றும் உங்கள் நினைவுடனே!

தோற்றம்
15.07.1939

மறைவு
15.10.2020

உங்கள் ஆன்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



தோற்றம்
16 . 12 . 1955

மறைவு
18 . 09 . 2025

**புண்ணியமூர்த்தி ஸ்ரீவிக்கினேஸ்வரன்**

(இளைப்பாறிய காரைநகர் கோட்டக்கல்வி அதிகாரி, தர்மகர்த்தா - வட்டு வடக்கு
பிரம்மனாச்சிதோட்ட கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானம், செயலாளர் - சிவபூமி அறக்கட்டளை)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் மூளாயை வதிவிடமாகவும் கொண்ட புண்ணியமூர்த்தி ஸ்ரீவிக்னேஸ்வரன் அவர்கள் நேற்று (18.09.2025) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான புண்ணியமூர்த்தி - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பரமசாமி - சுகிர்தமலர் தம்பதியரின் மருமகனும், வசந்தகுமாரியின் அன்புக் கணவரும், சிவதர்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - யாழ் போதனா வைத்தியசாலை), உமாசுதன் (சுற்றாடல் அதிகாரி - மத்திய சுற்றாடல் அதிகார சபை, கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரென்சிலா (ஆராய்ச்சி உத்தியோகத்தர் - கமநல அபிவிருத்தி திணைக்களம், வவுனியா) அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான ஸ்ரீனிவாசன், ஸ்ரீசரவணபவன், ஸ்ரீகாந்தன், ஸ்ரீபாலேந்திரா மற்றும் திருமதி. நிமலவேணி நடராசா, திருமதி. கமலவதனி தவபாலன், ஆறுமுகதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மூளாயிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (19.09.2025) வெள்ளிக்கிழமை காலை 07.30 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பொன்னாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கெள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மூளாய்,
சுழிபுரம்.

(CS/59432) JK

தகவல்:
குடும்பத்தினர்
077 245 9005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன நாட்டவர் சடலமாக மீட்பு

சீன நாட்டவர் ஒருவர் தெஹிவலை பிரதேசத்தில் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
கட்டடம் ஒன்றுக்குக் கீழ் இருந்தே அவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. அந்த நபர், கட்டடத்தில் இருந்து கீழே வீழ்ந்து உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-சீ)

# வல்லிபுர ஆழ்வாருக்கு 21 இல் கொடியேற்றம்!

யாழ்ப்பாணம், செப்.19
வரலாற்றுப் பிரசித்திபெற்ற வல்லிபுரம் ஆழ்வார் கோவில் மஹோற்சவம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. மஹோற்சவத்தை முன்னிட்டு வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஏற்பாட்டுக் கூட்டத்தில் பல முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.
அதன் பிரகாரம், அடியார்கள் சமயாசாரப்படி உடை அணிந்துவரவேண்டும், பெறுமதியான தங்க ஆபரணங்கள் அணிந்துவரக்கூடாது, சமுத்திர தீர்த்தமாடும் போது தீர்த்தமாடும் இடத்திலிருந்து 50 மீற்றர் தூரத்துக்கு படகுகள் பயன்படுத்துவதைத் தவிர்த்தல், சப்பறம், தேர், தீர்த்தம் ஆகிய உற்சவ காலங்களில் ஒரு வழிப்பாதையை பயன்படுத்தல், பொலித்தீன் பாவனையைத் தவிர்த்தல், சிறுவர்களை வியாபார நடவடிக்கையில் ஈடுபடுத்தமுடியாது, உணவு நிலையம் நடத்துவோர் மருத்துவச் சான்றிதழ் வைத்திருத்தல் வேண்டும், சுகாதார நடைமுறைகளை சீராகப் பின்பற்றவேண்டும் உள்ளிட்ட நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என ஆலய நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (ச-25)

## சாட்டி
## சிந்தாத்திரை மாதா திருத்தலம்
## வருடாந்த திருவிழா அறிவித்தல்

வருடாந்த திருவிழா நேற்று 18.09.2025 ஆரம்பமாகி 27.09.2025 அன்று நிறைவு பெறுவதனை முன்னிட்டு 21.09.2025 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு சாட்டி திருத்தல வளாகத்தினுள் தற்காலிக வியாபாரத்திற்கான இட ஒதுக்கீடு வழங்கப்படும். இந்த இடங்களுக்கு வேலணை பிரதேச சபையிடமிருந்து அனுமதி பெற்ற பின்னரே வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். உணவு வியாபார நிலையங்களை நடத்துபவர்கள் தங்களிடம் அனுமதி இருப்பின் அதை கொண்டு வர வேண்டும். இல்லையெனில் வேலணை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியின் அனுமதியைப் பெற வேண்டும்.

**திருத்தல பரிபாலகர்**

(CS 59430) A

## உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்
## விசேட பொதுக் கூட்டம் -28.09.2025

**பழைய மாணவர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 28.09.2025 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது. சில முக்கியமான தீர்மானங்களை எடுக்க உள்ளதால் சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**செ.சிவலிங்கராஜா**
**செயலாளர்** (CR/46089) JK 18.09.2025

# Invitation for Bids (IFB)
## ROAD DEVELOPMENT DEPARTMENT
## KILINOCHCHI

1. The Chairman Regional Procurement Committee (RPC) on behalf of Road Development Department, Kilinochchi invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.
2. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.
3. To be eligible for contract award the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in Grade mention below table in Highways specialty.
4. "Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri lankainterms of the public Contract Act No 3, of 1987. The certificate of registration (PCA 03) shall be submitted with the bid"
5. Interested eligible bidders may obtain further information from **Chief Engineer, Road Development Department, Kilinochchi** (Email:- rdd.kilin@gmail.com) from **19.09.2025** until **02.10.2025** from 9.00 am to 3.00pm inspect the bidding documents at the address **Chief Engineer's Office, Road Development Department, 155th Mile Post, Kandy Road, Kilinochchi.**
6. Qualification requirements to qualify for contract award is given in "section 4 of the qualification information and Section 5 of the Schedule/ Bidding data of the procurement document.
7. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chief Engineer, Road Development Department, 155th Mile Post, Kandy Road, Kilinochchi, Telephone 021 228 5461** from **19.09.2025 until 02.10.2025 from 9.00 am to 3.00 pm.** Upon payment of a non-refundable fee as mention below table. The method of payment will be **by cash.**
8. Bids shall be delivered in duplicate to the address at **Chairman,Regional Procurement Committee, Road Development Department,155th Mile Post, Kandy Road, Kilinochchi**on or before **10.00 am** on **03rd October 2025.** Late bids will be rejected. Bids will be opened at above place soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9. All bids shall be accompanied by a "Bid-Security, of an amount and validity date mentioned in the table below.
10. The pre-bid meeting will be held on 29.09.2025 at 10.00 am at the Chief Engineer's Office,Road Development Department, 155th Mile Post, Kandy Road, Kilinochchi.

| S.No | Contract No. | Name of the Contract | Estimated Cost without VAT (Rs.Mn) | CIDA Grade Required Highways | Required Bid Security | | Contract period | Non Refundable fee |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount (Rs.) | Validity Period | | |
| 01 | KL/RDD/CE/KL/PSDG/2025/05 | Construction of Causway at RB Main Channel Akkarayankulam Road | **4.4** | C8 and above | 45,000.00 | 19.12.2025 | 45 days | 3000.00 |
| 02 | KL/RDD/CE/KL/MN/2025/17 | Maintenance of Elephantpass-Thadduwankoddi-Murasumoddai Road | **2.0** | C9 and above | 20,000.00 | 19.12.2025 | 45 days | 3000.00 |
| 03 | KL/RDD/CE/MU/MN/2025/17 | Road way site clearing to RDD Roads in Mullitivu Area | **2.0** | C9 and above | 20,000.00 | 19.12.2025 | 45 days | 3000.00 |

**The Address referred to above is:**

**Chairman,**
**Regional Procurement Committee,**
**Road Development Department,**
**Kilinochchi.**

(CR 46086) E

## மரண அறிவித்தல்

### சதாசிவம்பிள்ளை ஜெகதீஸ்வரன்

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம்பிள்ளை ஜெகதீஸ்வரன் (முன்னாள் யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கப் பணியாளர்) கடந்த (17.09.2025) புதன்கிழமை (புரட்டாதி 01) கொழும்பில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான அதிபர் சதாசிவம்பிள்ளை பவளநாயகம் அவர்களின் மகனும், கல்வயலைச் சேர்ந்த பராசக்தியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற லோகேஸ்வரி விஜயரட்ணம் (பழம் றோட், கந்தர்மடம்), லோகேஸ்வரன் **B.Sc(Hons)** அவுஸ்திரேலியா, சிவநாதன் (இளைப்பாறிய யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க பணியாளர்), குகநாதன் (முன்னாள் **T.K.** ரெக்ஸ்ரைல்ஸ் பணியாளர், யாழ்ப்பாணம்), சிவராணி நவீனச்சந்திரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற தவமணிதேவி மகேந்திரன் (நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்), சிவகலை (லண்டன்), கலைச்செல்வி (திருநெல்வேலி) ஆகியோரின் சகோதரரும், குருபரன் (**B.Sc** பொறியிலாளர்-அவுஸ்திரேலியா), பிறேம்குமார் (**B.Sc** பொறியிலாளர்-அவுஸ்திரேலியா) ஆகியோரின் தந்தையாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21.09.2025 ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**சதாசிவம்பிள்ளை சிவநாதன்**
**271, பலாலி றோட்,**
**ஆலடிச் சந்தி, கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**

(CS 59431) A

## Amendment Notice
## Invitation for Bids (IFB)
## VENGALACHEDDIKULAM PRADESHIYA SABHA
## Acceleration of resettlement activities in northern & eastern province -2025

**The Mentioned (Work listed table) Bid Security Validity Period Date of IFB which published on 18.09.2025 has been Corrected as 15.01.2026. and 5th paragraph (Two thousand five hundred rupees) in Words as "Three thousand five hundred rupees"**

**Chairman,**
**Divisional Procurement Committee.**
**Vengala cheddikulam Pradeshiya Sabha,**
**Mannar- Madawachchi Road, Cheddikulam**
**[Telephone No: 024 2260914**
**Fax No: 024 2260913]**
**19.09.2025**

(CR/46080) JK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈ.பி.எவ். பிரச்சினைகள்; சீராக்க நடமாடும் சேவை


கொழும்பு, செப்.19
ஊழியர் சேமலாப நிதியம் (ஈ.பி.எவ்) தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும்வகையில், தொழிலாளர் திணைக்களம் செப்ரெம்பர் 22 முதல் 26 வரை விசேட நடமாடும் சேவைத் திட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளது.
இந்த நடமாடும் சேவை, நாடு முழுவதுமுள்ள தொழிலாளர் திணைக்களத்தின் மாவட்ட மற்றும் உப அலுவலகங்களில் இடம்பெறும். இதன்போது ஈ.பி.எவ். கணக்கு மற்றும் நிலுவை குறித்த விசாரணைகள், தேசிய அடையாள அட்டைக்கு ஏற்ப உறுப்பினர் விவரங்களைத் திருத்தம் செய்தல், புதிய உறுப்பினர்களைப் பதிவு செய்தல், முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளுதல், தொழிலாளர் சட்டம் குறித்த வழிகாட்டல் என்பன இடம்பெறவுள்ளன.
ஈ.பி.எவ். உறுப்பினர்கள் தங்களது 'பி' அட்டையையும், விவரங்களைத் திருத்தம் செய்யும்போது தொழில் வழங்குநரின் கடிதத்தையும் கொண்டுவருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ச-இ)

## துசிதவுக்கு பிணை

கொழும்பு, செப்.19
தேசிய லொத்தர்சபையின் முன்னாள் பணிப்பாளர் துசித ஹல்லொலுவ பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இந்த உத்தரவைக் கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமைபிறப்பித்துள்ளது. தேசியலொத்தர் சபைக்குச் சொந்தமான மடிக்கணினி, கையடக்கத்தொலைபேசிகள் உள்ளிட்ட பொருள்களை முறைகேடாகப் பயன்படுத்தியதாக அவர் மீது குற்றஞ்சாட்டப் பட்டுக் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்என்பதுகுறிப்பிடத்தக்கது. (ச-இ)

## இலங்கைசெயற்கைக்கோள் இன்று விண்ணுக்கு

கொழும்பு, செப்.19
உள்ளூர்ப் பொறியியலாளர்களின் தொழில்நுட்ப நிபுணத்துவத்துடன் உருவாக்கப்பட்ட இலங்கையின்மூன்றாவது சிறியசெயற்கைக்கோள் சுற்றுப்பாதையில் இன்று ஏவப்படவுள்ளதாக மொரட்டுவையில் உள்ள ஆர்தர் சி. கிளார்க் நவீன தொழில்நுட்ப நிறுவனம் அறிவித்துள்ளது.
'BIRDSX DRAGONFLY' எனப் பெயரிடப்பட்ட இந்தச் செயற்கைக்கோள், ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதியன்றுநாசாவால்ஏவப்பட்டஸ்பேஸ்எக்ஸ்-33 ரொக்கெட்மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது.
அதேவேளை 2019 ஆம்ஆண்டில், இலங்கை தனது முதலாவது நானோ செயற்கைக்கோளான 'ராவணன்1' ஐ வெற்றிகரமாக ஏவியது. மேலும் 2022 ஆம் ஆண்டில், ஐந்து சர்வதேசக் கூட்டாளர்களை உள்ளடக்கிய பன்னாட்டுத் தொழில்நுட்ப ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக KITSUNE செயற்கைக்கோள்ஏவப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் இடம்பெற்ற சுக்கிரவாரச் சொற்பொழிவின்போது அறநெறிப் பாடசாலை மாணவர்களிடம் இருந்து கேள்விகள் தொடுக்கப்பட்டு பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-17)

## விபத்தை ஏற்படுத்தி தப்பிச்சென்ற டிப்பர்

### பெண் படுகாயம்

வவுனியா, செப்.19
வவுனியா - கொறவப்பொத்தானை வீதியில் விபத்தை ஏற்படுத்திய டிப்பர் வாகனமொன்று நிறுத்தாமல் தப்பிச்சென்றுள்ளது. இதில் பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.
மோட்டார் சைக்கிளில் சென்ற குறித்த பெண் வீதியின் கரையில் நின்றுள்ளார். இதன்போது கொறவப்பொத்தானை திசைநோக்கி வந்த டிப்பர் வாகனம் அவரை மோதியதில் குறித்த பெண் மோட்டார் சைக்கிளில் இருந்து தூக்கிவீசப்பட்ட நிலையில் காயமடைந்தார். (ச-110)

### பாதுகாப்புப்...

ருந்தாலும், பிரிவினைவாத சிந்தனை யுள்ள பலரால் மஹிந்தவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உள்ளது என்று முன்னாள் பிரதி அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையின் 5ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ச, அரசாங்க வதிவிடத்தில் இருந்து வெளியேறியமை தொடர்பில் பலரும் பலகோணங்களில் கருத்துகளை வெளியிடுகின்றனர். மஹிந்த ராஜபக்ச என்பவர் அரசியல்வாதி மட்டும் அல்லர். இந்த நாட்டில் நிலவிய 30 வருடகால போரை முடிவுக்கு கொண்டுவந்த தலைவர். சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணியாமல் நாட்டுக்காக தனது பொறுப்பைச் சரிவர நிறைவேற்றியவர்.
'மஹிந்தவுக்கு மூன்று மகன்மார் உள்ளனர். அவர்களால் மஹிந்த ராஜபக்சவை பார்த்துக்கொள்ள முடியாதா?' என்று சிலர் கேட்கின்றனர். தனது தந்தையை பார்த்துக்கொள்ளும் இயலுமை நாமலுக்கு உள்ளது. எனினும், பிரிவினைவாத போரை முடிவுக்கு கொண்டுவந்த அவருக்கு பாதுகாப்பு வழங்குவதில்தான் பிரச்சினை உள்ளது. புலிகள் அமைப்பு ஆயுத ரீதியில் தோற்கடிக்கப்பட்டிருந்தாலும் பிரிவினைவாத சிந்தனை உடையோர் இன்னும் இருக்கின்றனர். இந்த நாட்டை அராஜக நிலைக்கு கொண்டுசெல்ல முற்படுகின்றனர். அதனால்தான் அரகலய காலத்தில்கூட நிதி வாரி வழங்கப்பட்டது. அதன் மற்றுமொரு அங்கமாகவே மஹிந்த வெளியேற்றப்பட்டுள்ளார். மஹிந்த ராஜபக்ச மீண்டும் விஜேராம மாவத்தைக்குச் செல்ல மாட்டார். அவரை மக்கள் பார்த்துக் கொள்வார்கள். தமது நாட்டுக்கு சுதந்திரத்தை பெற்றுதந்த தலைவரை வேறு நாடுகள் இவ்வாறு செய்வதில்லை. இலங்கையில்தான் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன - என்றார். (அ-ம-44)

### 240 கிலோ...

இராணுவத்தினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய, பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின்போதே இந்தக் கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபரக்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-113)

### சங்குப்பிட்டிப்...

டிப்பரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-28-131)

## மரண அறிவித்தல்



**அமரர் முருகையா அருந்தவதேவி (கற்குழி அம்மா)**

சுன்னாகம் கிழக்கை பிறப்பிடமாகவும், 75/53 சிந்தாமணிப் பிள்ளையார் கோவில் வீதியினை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட அமரர் முருகையா அருந்தவதேவி (கற்குழி அம்மா) அவர்கள் கடந்த (17.09.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற முருகையாவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான வைத்தியலிங்கம் - ராசம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு - ஆச்சிமுத்து தம்பதியரின் மருமகளும், வசிகரன் (லண்டன்), வனஜா (கனடா), ரகு (டென்மார்க்), கண்ணன் (விஜி - வவுனியா), காலஞ்சென்ற பாபு ஆகியோரின் பாசமிகு தாயாரும், கீதா, மோகன், சியாமளா, கிருபனா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், விதுனா, கௌதமன், கௌசிகன், சபித்தா, கவின், துவஸ்திகா, சுவஸ்திகன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (19.09.2025) வெள்ளிக்கிழமை சிந்தாமணிப் பிள்ளையார் கோவில் வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 03.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்திற்கு எடுத்துசெல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
கண்ணன் - 077 744 4122
பூவி - 077 736 4875

(CR/29095) JK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலையில்...

திருகோணமலையிலிருந்து வடகிழக்கே 60 கிலோமீற்றர் தொலைவில் இந்த நிலநடுக்கம்ஏற்பட்டதாகபுவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.
இலங்கையில் ஏற்படும் நிலநடுக்கங்களை உணரும் வரைபட அலுவலகங்கள், மகாகனதர, ஹக்மான, பல்லேகெலே மற்றும் புத்தங்கல பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள நிலையில், அனைத்து அலுவலகங்களிலும் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. எனினும், சுனாமிப் பேரலைக்குச் சாத்தியங்கள் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## காற்றாலைக்கு...

மன்னாரில் முன்னெடுக்கப்படும் காற்றாலைத் திட்டத்துக்கு எதிராகவும், கனிய மணல் அகழ்வுக்கு எதிராகவும் கொழும்பில் ஜனாதிபதி செயலகத்தின் முன்பாக இன்று பெரும் போராட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் தெரிவித்ததாவது:-
காற்றாலைகளுக்கு எதிராகவும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராகவும் மன்னாரில் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டம் இன்றுடன் (நேற்று) 47ஆவது நாளை அடைந்துள்ளது. எனினும், இதுவரை அந்தத் திட்டங்களை முற்றாகக் கைவிட்டதாக எந்தவொரு அறிவித்தலும் விடுக்கப்படவில்லை. ஆதலால், மன்னாரில் மக்களின் விருப்பங்களுக்கு முரணான வகையில் முன்னெடுக்கப்பட்டுவரும் இந்தத் திட்டங்களை உடனடியாகக் கைவிடுமாறு வலியுறுத்திக் கொழும்பில் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக நாளை (இன்று) பிற்பகல் 2 மணியளவில் போராட்டம் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம். மன்னாரின் பல்வேறு கிராமங்களில் இருந்தும் நூற்றுக் கணக்கான மக்கள் இந்தப் போராட்டங்களில் கலந்துகொள்ளவுள்ளனர். எமக்கு ஆதரவாக சிங்கள சகோதரர்களும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் - என்றார். (அ-ம-56)

## தீவக...

தார். யாழ். மாவட்ட விசேட போக்குவரத்து ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே, தீவகப் பகுதியின் வீதி அபிவிருத்திப் பணிகளுக்காக 250 மில்லியன் ரூபா நிதியை விசேடமாக ஒதுக்கப்பட்டுள்ள விடயத்தை அமைச்சர் பிமல் தெரிவித்தார்.
இதனைத் தொடர்ந்து பயணிகள் கடற் போக்குவரத்துத் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. வீதி விபத்துக்கள், யாழ். மாவட்டத்தில் இயங்கும் சாரதி பயிற்சிப் பாடசாலைகள், ரயில் திணைக்களம் தொடர்பான விடயங்களும் ஆராயப்பட்டன. குறிப்பாக கடந்த காலங்களில் இயங்கி தற்போது நிறுத்தப்பட்டுள்ள ரயில் சேவைகளை மீள ஆரம்பிக்குமாறு ஆளுநர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் வலியுறுத்தினர்.
இதேவேளை, யாழ். நகரத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மத்திய பேருந்து நிலையம் தொடர்பாகவும் பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டன.
இந்தக் கலந்துரையாடலில் அமைச்சர் இ.சந்திரசேகர், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், க.இளங்குமரன், எஸ்.ஸ்ரீபவானந்தராஜா, ஜெ.றஜீவன் ஆகியோரும், தவிசாளர்கள், அமைச்சு அதிகாரிகள், பாதுகாப்புத் தரப்பினர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-20-26-66-100)

## சீநோர்...

காரைநகர் சீநோர் படகுத் தளத்தில் இடம்பெற்றது.
நிகழ்வில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், எஸ்.ஸ்ரீபவானந்தராசா, ஜெ.றஜீவன், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், கடற்றொழில் அமைச்சின் செயலாளர், கடற்றொழில் கூட்டுத் தாபனத்தின் தலைவர், கடற்றொழில் நீரியல் வளங்கள் பணிப்பாளர், சீநோர் நிறுவனத்தின் தலைவர் மற்றும் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். சீநோர் படகுத் தளம் நெடுநாளாக இயங்காத நிலையிலிருந்தது. இதனால் படகுத் திருத்தப் பணிகளை மேற்கொள்வதில் உள்ளூர் மீனவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். இதுதொடர்பில் கடற்றொழில் அமைச்சரிடம் மீனவர்கள் முறையிட்டிருந்தனர். இந்த நிலையிலேயே இலங்கை மற்றும் இந்திய அரசுகளின் 330 மில்லியன் ரூபா நிதியில் புனரமைப்புப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. (அ-ம-26-20-66)

## திலீபனின்...

கூத்துகளில் ஈடுபடுகின்றனர் என்று முன்னாள் மூத்த போராளி பஷீர் காக்கா (மு.மனோகர்) தெரிவித்துள்ளார்.
திலீபனை அஞ்சலிப்பதற்குச் சென்ற அமைச்சர் சந்திரசேகர் திருப்பி அனுப்பப்பட்ட விவகாரம் தொடர்பில், அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-
மாற்றுக் கருத்துடையோருக்கு அஞ்சலி செலுத்துவதும் இறுதிச் சடங்கு போன்றவற்றில் கலந்துகொள்வதும் ஒரு நாகரிக சமூகத்தில் நடக்கும் விடயங்களே. ஆனால் இந்த விடயங்களில்கூட, 13ஆவது திருத்தத்தை ஏற்றோர்எதிர்ப்போர் என்ற வாய்ப்பாட்டில் துரோகி - தியாகி என வகைப்படுத்தும் புதியதோர் ஒழுங்கைக் கொண்டுவர தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் துடிக்கின்றனர். வடக்கு - கிழக்குக்கு அப்பாலுள்ள எமது உறவுகள், தென்னிலங்கையிலுள்ள நடுநிலையானோர் எமது போராட்டத்தினையும், திலீபனின் தியாக வரலாற்றையும் அறியவிடாமல் திரைபோட முனைவது சிறுபிள்ளைத்தனமானது.
அமைச்சர் சந்திரசேகரை திலீபனை அஞ்சலிக்க அனுமதிக்காமல் திருப்பி அனுப்பியமையும், அதைத் தொடர்ந்து நடந்த நிகழ்வுகளும் அரசியல் அறமற்ற விடயங்களே. எதிர்காலத்தில் பொது நிகழ்வுகளை நடத்த முனைவோர் நிகழ்வின் நோக்கத்தைத் திசைதிருப்புவோர் விடயத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென வேண்டுகிறேன். மக்களின் மனநிலையை உணர்வுகளை விளங்கிக்கொண்டு கண்ணியமான முறையில் நடந்துகொண்டால்தான் அடுத்த சந்ததியினர் அரசியல் கண்ணியத்தைக் கற்றுக் கொள்வர்.
எப்படியோ திலீபன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தபோது அங்கேயிருந்தவர்களில் பெரும்பாலும் நான் மட்டுமே நாட்டில் இருக்கிறேன். அதுபோலவே திலீபனுக்கான நினைவுத் தூபியை அமைக்க தனித்துத் தீர்மானம் எடுத்துச் செயற்படுத்தி முடித்த சி.வி.கே.சிவஞானத்தையும் இவர்கள் இதே தூபியடியில் அவமதித்து வரலாற்றில் கறுப்புப் பதிவுகளை ஏற்படுத்தியுள்ளனர்.
திலீபனின் நினைவுகளைக் கடத்தும் பணிகளை தடுத்து நிறுத்தும் சில்லறைத்தனமான முயற்சியைத் தடுத்து நிறுத்தும் வகையில், மாநகரசபைக்கு இவர்கள் செலுத்திய கட்டணத் தொகையை உண்டியல் மூலம் சில்லறையாகப் பெற்று இவர்களிடம் ஒப்படைக்கத் தீர்மானித்தேன். இவர்களின் சில்லறைத்தனமான செயலுக்கு சில்லறையாகவே கொடுக்கலாமென்றும் இந்த முயற்சியை மக்கள் மருத்துவமனை முன்றலில் ஆரம்பிக்கவும் முடிவெடுத்திருந்தேன். காலம் தாழ்த்தியேனும் முன்னைய ஏற்பாட்டாளர்களையே கண்காட்சியை அமைக்க சம்மதித்ததையடுத்து இந்த முயற்சியைக் கைவிட்டேன் - என்றுள்ளது. (அ-ம-26)

## புதைகுழிக்...

சேர்ந்த எண்பதுக்கும் அதிகமான இளைஞர்களும் யுவதிகளும் இராணுவத்தால் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர். அவர்களில் பலர் படுகொலை செய்யப்பட்டு, சடலங்கள் மண்டைதீவுப் பகுதியில் உள்ள சில கைவிடப்பட்ட கிணறுகளில் வீசப்பட்டு புதைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அந்தக் கிணறுகளையே அகழ்ந்து நீதியை நிலைநாட்டுமாறு ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது. இந்த முறைப்பாட்டின் மீதான நீதிமன்ற நடவடிக்கைகள் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியிருந்தன.
இதன்போதே, முறைப்பாட்டுடன் தொடர்புடைய கிணறுகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து, நவம்பர் மாதம் 12ஆம் திகதி அறிக்கை வழங்குமாறு நீதவான் உத்தரவிட்டதுடன், அடுத்தகட்ட விசாரணைகளையும் அன்றைய தினத்துக்குத் தவணையிட்டார்.
ஊர்காவற்றுறை பொலிஸாரால் இந்த வழக்கு விசாரிக்கப்படுவதாக இருந்தது. எனினும், ஆளணி உள்ளிட்ட வசதிகள் இல்லை என்று அவர்கள் மன்றில் தெரிவித்ததைத் தொடர்ந்தே, வழக்கு விசாரணைகள் யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (அ-ம-26-20)

## திலீபனுக்கு...

'பார்த்தீபன் திலீபனாக! திலீபன் தியாக தீபமாக!' எனும் தொனிப்பொருளில், தியாகதீபம் திலீபன் நினைவுத் தூபிக்கு முன்பாக, மாவீரர்களின் பெற்றோர், முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் இந்த ஆவணக் காட்சியகம் திறந்து வைக்கப்படவுள்ளது. (அ-ம-66)

## பிரச்சினைகளுக்குரிய...

பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். யாழ். மாவட்ட விசேட போக்குவரத்து ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே, அமைச்சர் பிமல் ரத்நாயக்க இந்த விடயத்தை வெளிப்படுத்தியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மக்களுக்கு நேரடியாகத் தாக்கம் செலுத்தும் ஒவ்வொரு விடயங்கள் தொடர்பிலும், நீண்டகாலப் பிரச்சினைக்குரிய விடயங்கள் தொடர்பிலும் மாவட்ட ரீதியான விசேட ஒருங்கிணைப்புக் குழுக்களை தனித்தனியே அமைப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. இதன்படி, யாழ்ப்பாண மாவட்ட போக்குவரத்து ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் நியமிக்கப்பட்டுள்ளார் - என்றார். (அ-ம-20-26-66)

## நல்லூர்...

களை மீண்டும் புனரமைக்கவும் தொல்லியல் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.
நல்லூர் மந்திரிமனை 2011ஆம் ஆண்டில் தொல்பொருள் சின்னமாக அப்போதைய அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், தனியார் காணிக்குள் அமைந்துள்ள சொத்தாகக் காணப்படுவதால் அதனைப் புனரமைத்துப் பாதுகாக்க முடியாத நிலையைத் தொல்லியல் திணைக்களம் எதிர்கொண்டது.
எனினும், மந்திரிமனையில் இடிந்து விழும் அபாய நிலையில் காணப்பட்ட பகுதிகளைத் தற்காலிகமாகப் பாதுகாக்கும் நோக்குடன் தொல்லியல் திணைக்களத்தினர் இரும்புக் கம்பிகளால் முட்டுக் கொடுத்திருந்தனர். அந்தக் கம்பிகள் கடந்தவாரம் திருடப்பட்டிருந்த நிலையில், அது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. எனினும், பொலிஸார் திருட்டுடன் தொடர்புடைய எவரையும் கைது செய்யவில்லை.
இதன் பின்னரே, மழையாலும் காற்றாலும் மந்திரி மனையின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்தது. தற்போது, ஆபத்தில் உள்ள எஞ்சிய பகுதிகளுக்கு இரும்புக் கம்பிகளால் முட்டுக்கொடுக்கப்பட்டுள்ளதுடன், புனரமைப்பு நடவடிக்கைக்கான நகர்வுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-66)

## ஒக்ரோபர்...

செம்மணிப் புதைகுழி மீதான இரண்டாம்கட்ட அகழ்வுப் பணிகள் செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதியுடன் முடிவடைந்த நிலையில், இது தொடர்பான வழக்கு விசாரணை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் உசைன் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.
முன்னைய வழக்குத் தவணையின் போது, அடுத்தகட்ட அகழ்வுப் பணிக்கான பட்ஜெட் கோரப்பட்டதால், மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிக்கான விரிவான பட்ஜெட் நீதிமன்றத்தில் நேற்று முன்வைக்கப்பட்டது. பட்ஜெட் ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்தில் ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதிமுதல் மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள முடியும் என்று நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.
இதையடுத்து பட்ஜெட் தொடர்பான நகர்வுகள் தொடர்பில் ஆராய்வதற்காக வழக்கு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதிக்குத் தவணையிடப்பட்டுள்ளது. பட்ஜெட் ஏற்றுக்கொள்ளப்பட்டால் எதிர்வரும் வழக்குத் தவணையின்போது அடுத்தகட்ட அகழ்வுப் பணிகள் தொடர்பில் தீர்க்கமான முடிவுகள் தெரியவரும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படங்கள் ஐ.சிவசாந்தன்

# தியாகதீபம் திலீபனின் 4ஆம் நாள் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், செப்.19
தியாகதீபம் திலீபனின் 4ஆம் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டன. நல்லூர் பின்வீதியில் அமைந்துள்ள தியாகதீபத்தின் நினைவிடத்தில் சுடரேற்றி, திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ச-41,66)

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
2025 ஆம் ஆண்டுக்கான பட்டப் படிப்புக்கள் ஆரம்பம்
BSc (Hons) in IT | BBA(Hons)
OCTOBER INTAKE | 2025
அனுமதிகளுக்கு அழைக்கவும்!
SLIIT NORTHERN UNI, 239 Arasadi Road, Kantharmadam Junction, Jaffna
021 7534 807

வேலையாட்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் மேசன்மார் தேவை
தொடர்புகளுக்கு:
077 844 9707

English Classes
உங்கள் வீடுகளில் தனி மற்றும் குழுவாகவும் அல்லது
Zoom மூலமும் Gr 1 to O/L and for English beginners
♦Grammar
♦Spoken & School Syllabus
T.P: 077 33 14 608

## ஞானச்சுடர் வெளியீடு

யாழ்., செப்.19
சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஞானச்சுடர் சஞ்சிகையின் 332ஆவது ஆவணி மாத இதழ் வெளியீட்டு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல்10.30 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் சைவப்புலவர் பொன். சந்திரவேல் மலரின் வெளியீட்டுரையையும், ஓய்வுநிலை அதிபர் இரா.ஸ்ரீநடராசா மலரின் மதிப்பீட்டுரையையும் ஆற்றவுள்ளனர். (ச-66)

## காண்பியக் காட்சி

அம்பாறை, செப். 19
வெற்றி ஜதீஸ்குமாரின் காண்பியக் கலைக்காட்சி அம்பாறை நாவிதன்வெளி கலாசார மத்திய நிலையத்தில் இன்று வெள்ளிக்கிழமை முதல் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை காலை 9.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது. (ம-25)

## அரசின் அடாவடிக்கு அஞ்சமாட்டோம்!

மின்சாரசபை ஊழியர்கள் போர்க்கொடி

கொழும்பு, செப்.19
அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் திட்டங்களுக்கு தொழிற்சங்கங்கள் தடைபோடுமானால் அதற்காக எந்த முடிவும் எடுக்கத் தயங்க மாட்டோம் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விடுத்த அச்சுறுத்தல் பேச்சுக்கு நாம் அஞ்சப்போவதில்லை என இலங்கை மின்சாரசபையின் ஐக்கிய தேசியக் கட்சி ஊழியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
இதுதொடர்பில் அதன் செயலாளர் அஜித் தேவபிரிய தெரிவிக்கையில்,
இலங்கை மின்சாரசபையின் மறுசீரமைப்பை எதிர்த்து, அதன் ஊழியர்கள் 14 நாள்களாக சுகவீன விடுமுறை மற்றும் சட்டப்படி வேலை போன்ற தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.
மின்சாரசபை ஊழியர்கள் உங்களின் அடாத்தான பேச்சுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் பயந்தவர்கள் அல்லர். முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு நடந்ததை மறந்துவிட்டீர்களா?
அரசாங்கம் ஜனநாயகத்துக்கு விரோதமாக நடக்க முடியாது. ஜனாதிபதிக்கு நாம் தெளிவாகக் குறிப்பிடுவது என்னவென்றால், மக்களுக்கு ஒளிவுமறைவின்றி காரணங்களைக் கூறுங்கள். மக்களைக் குழப்பவேண்டாம் - என்றார். (ச-இ)

## முகாமைத்துவ உதவியாளர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று

பொதுமுகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கத்தின் பொதுக்கூட்டம் சங்கத்தின் தலைவர் அ.றெஜி அலோசியஸ் தலைமையில் கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவுச்சபை மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளதால் அனைத்து திணைக்களங்கள், அரச அலுவலகங்களில் கடமைபுரியும் பொதுமுகாமைத்துவ உத்தியோகத்தர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் 11 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
➤ நல்லூர் குறுக்கு வீதி முகப்புடன், யாழ் மாநகர சபை முன் வீதி.
➤ நல்லூர் ஆலயத்தில் இருந்து 500m தூரம்.
➤ பருத்தித்துறை வீதி 150m, செட்டித்தெரு 50m.
➤ நாவலர் வீதி 150m, கச்சேரி நல்லூர் வீதி 100m.
இரண்டு பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
ஒருபரப்பின் விலை - 30 000 000 (மூன்று கோடி)
நல்ல சுற்றுச் சூழல்.
அனைத்து ஆவணங்களும் சரியாக உள்ளது.
தொடர்புக்கு - 077 468 3354, 077 288 0152
076 860 2770
Golden Real Estate (Pvt)Ltd

காணி விற்பனைக்கு உண்டு
யாழ் கோப்பாய் ராசபாதை வீதியில், Training college முன்பாக 14 பரப்பு காணி 20 அடி பாதையுடன் இரண்டு இரண்டு பரப்பாக பிரித்து விற்பனைக்கு உண்டு.
• குடியிருப்பு சூழல் • நல்ல நீர்க் கிணறு
• செம்மண் தறைக்காணி
• பிரதான போக்குவரத்து சேவை பஸ் செல்லும் வீதி முன்பாக.
பார்வையிடும் நேரம்:- காலை 6.00 - மாலை 6.00 வரை
தொடர்புகளுக்கு:- விமல்
076 755 8606, 074 338 4481, 077 638 5683



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org